
---


தாயுமானவரின் இலட்சியப் பயணம்
(தாயுமானவர் தரும் வாழ்வின் நோக்கம்)
மன்னார்குடி பானுகுமார்
ராஜம் பதிப்பகம்
இணையதளத்தில் banukumar.in

# தாயுமானவரின் இலட்சியப் பயணம்

(தாயுமானவர் தரும் வாழ்வின் நோக்கம்)

"எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவிதான்

யாதினு அரிதுஅரிது காண்".

மானுட வாழ்கைக்கு குறிக்கோள் அவசியம். குறிக்கோள் இல்லாத வாழ்க்கை நடைப் பிணத்தை ஒத்ததாகும்.

விலங்குகளும் வாழ்கின்றன. அவைகளுக்குக் குறிக்கோள் இல்லை. இரை தேடுவதும், அதனைக் குட்டிகளுக்கு உண்பிப்பதும், தாம் உண்பதுமே அவைகளுக்கு வாழ்க்கை ஆகின்றது.

இது போன்ற வாழக்கையையே, மானிடரும் மேற்கொள்ளின் விலங்கினத்தினின்றும் எவ்வாறு அது வேறுபட்டதாகும்.

மரஞ்செடி கொடிகளும் தமக்கு வேண்டிய உணவைத் தாமாக வேர்களின் மூலமாக சேகரித்து ஒங்கி வளர்ச்கின்றன.

அவற்றிற்கும் இன்ப துன்ப உணர்ச்சிகள் உண்டு என்று நம்ம ஊர் தாவரவியல் அறிஞர் சர். ஜகதீசச் சந்திர போஸ் தமது ஆராய்ச்சியின் மூலம் வெளியிட்டுளாளார்.

வாழ்நாள் முழுவதும் உணவு உடை முதலிய தேவைகளைப் பூர்த்தி செய்வதிலேயே காலம் கழித்தும், இன்ப துன்ப உணர்ச்சிகளுக்கு அடிமைப்பட்டும் ஒருவன் இருப்பானாயின் அவன் தம்மை எவ்வாறு இவைளினின்றும் வித்தியாசமென்று கருதக் கூடும்.

பாய்மரம் இல்லாது கடலில் செலுத்தப்படும் தோணியானது திக்குத் திசை தெரியாமல் அலையடிக்கும் திசையே சென்று தட்டிப் போகும். இலக்கை அடைய முடியாது.

அதுபோன்று இவைகள் வாழ்க்கையாகிய மரக்கலமும், குறிக்கோள் என்னும் பாய்மரம் இல்லாது ஆசையாகிய அலைகளினால் இழுத்துச் செல்லப்பட்டு துக்கமென்னும் கடலில் மூழ்கிப் போகும்.

அன்னார் இருக்கின்ற காலத்தில் உலகம் அவர்களைப் பற்றி அக்கரை கொல்லவதில்லை. இறந்த பின்னும் மறைவைக் குறித்து வருந்துவதில்லை.

உங்கள் இலட்சியமே வாழ்க்கையை நடத்தும் ஒளிவிளக்கு? உங்கள் வாழ்க்கையில் எதைச் சாதிக்க விரும்புகிறீர்களோ அதுதான் இலட்சியம். வெட்டவெளியை நோக்கி உங்கள் பயணம் அமையட்டும்.

இலட்சியங்களே உலகத்தின் எஜமானவர்கள். உங்கள் வாழக்கையில் வெற்றி பெறவதற்கு நீங்கள் தெரிந்தெடுக்கின்ற இலக்கு என்ன?

குறிக்கோள் ஒன்றே மனிதனை மனிதனாக்குவதாகும். மனிதனின் வெளிப்படுத்தத் துணண்டுதலாயிருப்பது. இது உயர்ந்த குறிக்கோளாக இருத்தல் வேண்டும்.

அதுவே மனிதனின் உண்மை இயல்பை வெளிப்படுத்தும் சாதனமாகும். அன்றாட வாழ்க்கையில் இன்பத்தைப் பெறச் சிலர் முயல்வர்.

அதற்கு இடையூறாக இருக்கக்கூடிய சிலவற்றை நீக்க முயற்ச்சிப்பர். இதில் ஒரளவு வெற்றி கண்டவுடன் முயற்சியைக் கைவிடுவர்.

இயந்திரம் போன்று அன்றாடக் காரியங்களைப் பின்னர் செய்து கொண்டே எஞ்சிய வாழ்நாளை போக்குவர். இதனால் மனிதனிடம் அடங்கியுள்ள் ஆன்மீக சக்திகளின் பெருமையை உணரமட்டாதவர் ஆகின்றனர்.

- "நாம் தற்போது இருக்கும் நிலைமை நாம் முன்பு நினைத்த நினைவுகளின் பயனே" என்று புத்தர் சொல்லியுள்ளார்.

"மனம் போல வாழ்வு" என்ற முதுமொழியும் இதை ஒட்டியே சொல்லப்பட்து ஆகும்.

நாம் நிதனைத்ததின்படி ஆகலாம். நினைப்பே நடப்பு. ஆனால் அவ்வெண்ணம் வலிமை உடையதாக ஆதல் வேண்டும். அப்பொழுதுதான் எண்ணியதை எண்ணியபடியே அடைய முடியும்.

"எண்ணிய எண்ணயாங்கு எய்துவர் எண்ணியவர்

திண்ணிய ராகப் பெறின்" வள்ளுவர்.

எண்ணியவர் மனத்திண்மை பெறல் வேண்டும். அப்பொழுதே மனம் அதன் கண் உறையும் ஆன்மீக சக்தியின் வலிமையை வெளிப்படுத்தும் இயல்பாகும்.

மனிதனின் ஆன்மா அளவு கடந்த ஆற்றலுக்கும். அறிவிற்கும், அன்பிற்கும், இன்பத்திற்கும், உறைவிடம்.

மனம் அவற்றை வெளிப்படுத்தம் ஒரு கருவியே. அன்றாட வாழ்க்கையின்போது மனம் ஆன்மீக சக்தியின் ஒரளவு பாகத்தையே வெளிப்படுத்துகின்றது.

மனத்திற்குத் தக்கப் பயிற்சி அளித்தாலின்றி ஆன்மீக சக்தியின் முழுத்தன்மையையும் வெளிகாட்ட இயலாது.

மனத்திற்கு தக்க பயிற்சி அளித்து ஆன்ம சக்திகளை அதன் மூலம் வெளிப்பட வைத்து மனிதனின் தெய்வீக இயல்பை உணர்த்தும் கல்வியே அழியாத கல்வி ஆகும். அதுவே கல்விகளில் எல்லாம் தலையாதும் ஆகும்.

குறிக்கோள் எத்தகைதாக இருக்க வேண்டும்? ஒழுங்கற்ற குறிக்கோளாயின் அது முன்னேற்றம் காணப்படாத மிருகத் தன்மையான வாழ்க்கையாக இது அமையும்.

ஒழுங்குற்ற குறிக்கோளயிருப்பின் அது நம்மில் இருக்கும் தமோ குணத்தைப் போக்கி ரஜோ குணத்தை வளர்க்கும்.

மூன்னேற்றிற்கான ஆக்கத்தைத் தந்து மனதைப் பண்படையச் செய்து உயிர்ப்பிக்கும். உண்மைப் பொருளை நாடவும், ஞானத்தை ஓங்குவிக்கவும், அநுபூதியைப் பெறவும் தூண்டும்.

ஒவ்வொரு மனிதனது உள்ளத்திலும் தேவ, அசுரப் போர் சதா, நிகழந்து வருகிறது.

ஆகவே தெய்வத் தன்மை ஓங்கச் செய்து அசுரத் தன்மையை வேரறுக்கும் இச்சைகளை உள்ளத்தில் வேரூன்றச் செய்தலே இந்தப்

பாரதப் போருக்கு முடிவு கண்டு ஆன்ம சக்திகளை வெளிப்படுத்தும் உபாயமாகும்.

நமக்குள் இருக்கம் தெய்வத் தன்மையை வெளிக் கொணர வேண்டுமாயின் தெய்வீகம் பொருந்திய இலட்சியம் அவசியம்.

யானையைக் கொண்டு யானையைப் பிடித்தல் போல, தெய்வத் தன்மை பொருந்திய ஒரு பொருளை அடைவதுதான் இலட்சியம் என்கொண்டு ஒழுகுபவருக்கு மனதில் உரையும் சங்கற்ப சக்தி பண்பட்டு வருகிறது.

சங்கற்ப சக்தியை இச்சா சக்தி எனவும் சொல்லலாம். இச்சா சக்தி ஆக்கம் பெற்ற பொழுது அது மிகவும் கடினமான காரியங்களையும் எளிதில் செய்து முடிக்கும் கிரியா சக்தியாகிறது.

இவ்விரண்டும் வாய்க்கப்பெற்ற சாதகர்களுக்கு ஞான சக்தி எளிதில் வாய்கிறது.

ஞானசக்தியின் வலிமை சொல்லுதற்கியலாது. மனோ வலிமை பெற்ற நெப்போலியனே பல வல்லரசுகளுக்குப் பீதியை உண்டாக்கினான் என்றால் ஞான வலிமை பெற்றவர்களின் பெருமையைச் சொல்லுதல் இயலுமோ?

சுவாமி விவேகாந்தரின் வாழ்க்கையே இதற்குச் சான்றாக உள்ளது.

தாயுமானவரும் இறைவனின் கருணைக்குப் பாத்திரமாக வேண்டும் என்ற ஒரே இலட்சியத்தை உடையவராக இருந்தார்.

இதற்கெனவே பதவியைத் துறந்தார். கற்ற கல்வி அனைத்தையும் துறந்தார்.

மௌனகுரு உணர்த்தியபடி மௌனத்தைக் கடைப்பிடித்து மனதின் சக்தியை ஒன்று கூட்டினார்.

அது உணர்வு என்னும் பெரும்பதம் ஆயிற்று. உணர்வை மனவெளிக்குள் செலுத்திப் பார்த்தார்.

அண்டங்கள் அடுக்கடுக்காய் அவ்வெளியில் காணப்பட்டன. அவற்றினைக் கடந்து சூரிய சந்திர மண்டலங்களுக்கு வந்தார்.

அவையும பொருளல்ல என்று மேலும் தொடர மூர்த்தி நிலைக்கு வந்தார்.

இதுவும் நீர்க்குமிழியென்ன சித்தத்திலேயே உதித்து சித்ததிலேயே மறைவதைக் கண்டு அதனையும் கடந்து சென்றார்.

விந்து நாத நிலைகள் காணப்பட்டன. அதையும் கடக்க எல்லாம் அற்ற சூனியநிலை காணப்பட்டது. சூனிய நிலையில் தாயமானவா் தனித்தும் விழித்தும் பகித்தும் இருக்கிறார்.

“முப்பாழும் தாண்டி வந்து

அப்பாலே நின்றவர்க்கு

இப்பார்வை கிடையாது

அப்பால் திருநடனம் - ஆடுவார்”

என்று நந்தனார் சரித்திரத்தில் கோபாலகிருஷ்ண பாரதியார் சொல்லியுள்ளபடி, சுத்த சூனிய வெளியிலே தன் இலட்சிய தேவையைக் காண்கின்றார்.

அதுவே ஆன்மலிங்கம் எனவும் அருள் எனவும் இயம்பப் பெறுவது ஆகும்.

இதன் கருணைக்கு இலக்காக வேண்டும் என்று தாயுமானவர் விழைகின்றார்.

அதன் கருணைக்கு இலக்கானாலொழிய தந்தையாகிய இறைவனைச் சென்றடைய முடியாது.

இதனைப் பட்டினத்தாரும், தாயுடன் சென்று மெய்யருளாந் தாதையைக் கூடி தாயை மறந்து ஏயுமதே நிஷ்டை என்றான் எழிற்கச்சி ஏகம்பனே" என்கின்றார்.

தாயுமானவர், பட்டினத்தார், அருணகிரிநாதர் போன்ற அனுபூதி மகான்களின் சரித்திரத்தை எல்லாம் நன்றாக ஆராய்ச்சி செய்தவர். அதனாலன்றோ தாயுமானவர் அடியார் வணக்கம் பகுதியில்.

"ஒட்டுடன் பற்றுஇன்றி உலகைத் துறந்து செல்வப்

பட்டினத்தார் பத்தரகிரி பண்பு உணர்வது எந்நாளோ", (தாயு.பா.1111 அடியார்வ. 5)

"கண்டது பொய் என்றுஅகண்டா கார சிவம் மெய்எனவே

விண்டசி வாக்கியர் தான் மேவும் நாள் எந்நாளோ," (தாயு.பா.1112 அடியார்வ.6)

"கந்தர் அநுபூதி பெற்றுக் கந்தர்அநுபூதி சொன்ன

---

எந்தைஅருள்நாடி இருக்கும் நாள் எந்நாளோ" (தாயு.பா.1114 அடியார்வ.8)

என்றெல்லாம் அவர்களைப் தாயுமானவர் புகழ்ந்துள்ளார்.

ஆகவே மெய்யருளின்பின் அவரது உணர்வு செல்ல முயற்சிக்கையில் அக்காட்சி மறைந்து விடுகிறது.

தாயுமானவவர் இதனைக் குறித்து வருந்துகிறார். மலபரிபாகம் ஏற்படாமையினால் அருளொளி நிலைக்க மனவெளியில் நிற்கவில்லை.

தனக்கு எப்பொழுது மலபரிபாகம் உண்டாகி அருளானது மனவெளியில் நிலையாக நின்ற பரமசுகமாகிய பேரின்பம் அடைவது என்று வருந்தியே, எந்த நாள் கருணைக்கு உரித்தாகும் நாள் எனவும், என் இதயம என்னை வாட்டுதே எதென்று சொல்லுவேன் என்றனர்.

கருணைக்கு இலக்காகும் மலபரிகாம் ஏற்பட்டமையினால் தான் இத் துணைக்காலமும் அதற்கெனப் பாடுபட்டு என்ன பலன் கண்டது எனத் தாயமானவர் வெதும்புகின்றார்.

இதய தாகமோ அதிக சித்த வண்ணமாய் இருக்கின்றது. ஆனால் இலட்சியமோ முற்றிலும் கைகூடவில்லை.

தன்னுடைய தற்போதைய நிலைமை முன் நிலையைிலும் சற்றேனும் வேறுபட்டதாக் தெரியவில்லை. ஆகவே "முன்னொடு பின்மலைவரவும் இற்றைவரை யாது பெற்றேன்" என்றார்.

பந்தத்திலிட்ட மெழுகானது எவ்வாறு உருகுமோ அவ்வாறு அவரது உணர்வும் மெய்யருளின் பொறிபட்ட மாந்திரத்தில் உருக ஆரம்பித்துவிட்டது.

இதுவே இறையுணர்வு பெற்ற நிலையாகும். உணர்வு உருக உருக உடல் குழைதல் போலும். உள்ளம் உருகுதல் போலும் காணப்படுகின்றது. அடிக்கடி மூர்ச்சிக்கின்றார். இந்த நிலையினை பிறிதொரு பாடலில்

"என்புஎலாம் நெக்குஉடைய ரோமம் அஞ்சி சிலிர்ப்ப உடல்

இழகமனது அழலின் மெழுகாய்

இடையறாது உருகிவரு மழைபோல் இரங்கியே

இருவிழிகள் நீர் இரைப்

அன்பினால் மூர்ச்சித்த அன்கருக்கு அங்ஙனே

அமிர் தசஞ் சீவிபோல் வந்து

ஆனந்த மழைபொழிவை..." (தாயு.பா.80 - சுகவாரி 4)

என்றார்.

உணர்வு உருகுவதால் மேற்சொல்லிய நிலைகள் எல்லாம் ஏற்படுகின்றன.

மோட்ச தாகத்தினால் உந்தப்பட்ட தாயமானவர் இவ்வாறு உடல் குழைந்து மூர்ச்சிக்கும் நிலையே பரமசுகம் பெறுவதற்குரிய வழியாம் என ஐயுறுகின்றார்.

அதனையே "பந்தமான திலிட்ட மெழுகாகியுள்ளம் பதைத்து உருகவோ? பரமசுகமாவது பொறுப்பறிய துயராமாய் பலகாலும் மூர்ச்சிப்பதோ என்று சொல்லினர்.

இறைவன் அறிவிற்கு அறிவாய் இருக்கக் கூடியவர். அறிவிற்கு அறிவாய் இருக்கின்ற தன்மையினால் ஜீவர்களின் சித்தத்தில் இருக்கும் இச்சைகளை எல்லாம் அவர் நன்கு அறிந்திருக்க வேண்டும்.

ஆகவே. "இறைவனின் கருணைக்கு இலக்காக வேண்டும். அன்பர்கள் எய்திய பரமசுகத்தைத் தானும் அடைய வேண்டும் என்ற தன்விருப்பம் இறைவனுக்கத் தெரியாதிருக்கக் கூடியதன்று என்பதை "சிந்தையானதும் அறிவை என்னறிவில் அறிவான தெய்வம் நீயன்றி உளதோ" என்றனர்.

பரமசுக இன்பம் கிடைப்பது நிச்சயமானாலும் அதில் கால தாமதம் ஏற்படுதைச் தாயுமானவர் விரும்பவில்லை.

"இன்றையக்கு இருந்தாரை நாளைக்கு இருப்பார் என்று

எண்ணவோ திடம் இல்லையே"

என்ற காரணத்தினால் அப்பரம சுகத்தை உடனே பெறும் ஆவல் உள்ளவராகின்றார்.

உடைந்த கப்பலானது கடலில் செல்லின் சிறிது தூரம் செல்லும் முன் தண்ணீர் உள்ளுக்குச் செல்ல மூழ்கவிடும்.

அதுபோன்தே இந்த உடலும். பிணியென்னும் உடைப்பு ஏற்பட்டு விட்டால் இந்த உடலாகிய மரக்கலமும் மூழ்கிவிடும்.

ஆதலால் தாயமானவர் " தேக நிலையல்லவே. உடை கப்பல் கப்பலாய் திரையாழியூடு செலுமோ" என்றனர்.

தன்னுடைய குறிக்கோளை அடைந்து மனவெளியில் ஆட்கொண்ட இறைவன் தான் விரும்பிய பரம சுகத்தினை அருளாது

-----------------------------------------------------------------------------------------------------------------------------

ஒன்றுமறியாதவர் போல் தன்னை துயரத்தில் ஆழ்த்துதல் முயையாகாது என்பதையே "சொந்தமாய் ஆண்ட நீ அறியார்கள் போலவே துன்பத்தில் ஆழ்த்தல் முறையோ" என்றனர்.

இக்கருத்தினையே பிறிதொரு பாடலிலும் தாயுமானவர் "அன்பின்வழி அறியாத வெண்ணைத் தொடாந் தென்னைநான்

அறியாத பக்குவத்தே

ஆசைப் பெருக்கைப் பெருக்கிக் கொடுத்துநா

உற்றேன் அலைந்தேன் என

வென்புலன் மயங்கவே பித்தேற்ற விட்டாய்

இரங்கியொரு வழியாயினும்

இன்பவெள்ள மாகவந் து உள்ளங் களிக்கவே

என்னைநீ கலந்தது உண்டோ?

என்று கூறியுள்ளார்.

ஆகவே இனியும் தாமதிக்காது தன்னை எவ்வாறு உறவு பாராட் மனவெளியில் கலந்தாரோ அது போன்று தான் உய்யும் வண்ணம் பரமசுகப் பேற்றை அளிப்பதே முறையென்று குறிப்பாகச் தாயுமானவர் இறைவனை விளித்துச் சொல்லியுள்ளார்.

தாயுமானவர் தனது குறிக்கோளை, இலட்சியத்தை இறுதியாக அடைகிறார்.

ஞானம் அடைந்த பின்னர் பரப்பிரம்ம ஞானத்தை உணருகிறார். ஆசையே அவருக்கு இல்லை. மனநிறைவு கிடைக்கிறது. பின்பு ஞானநிஷ்டை அடைகிறார்.

ஞான நிஷ்டையால் உலகத்தைப் பார்க்கிறார். இப்போது தன்னையோ, உலகத்தையோ நிந்திக்கவில்லை. ஆனந்தமாய் இருக்கிறார்.

எனக்கு எந்த குறையும் இல்லை. வாழ்வு ஆனந்தமாக இருக்கிறது என்பதை ஞானநிஷ்டையில் உணருகிறார்.

ஞானநிஷ்டையில் இருந்து பாடியதுதான் ஆனந்த களிப்பு. ஆனந்தகளிப்பில் அனைத்தையும் அறிந்து பாடுகிறார்.

“மன ஒருமைப்பாட்டினாலும், தீர்க்கமான குறிக்கோள்களைக் கொள்வதினாலும் மட்டுமே மனிதன் சாதிக்க முடியும்” என்பதை தாயுமானவர் நமக்கு உணர்த்துகின்றார்.

சோற்றைத் தேடி அலைந்து தின்று. சின்னஞ் சிறு கதைகளைப் பேசித்திரிந்தபடி, பிறர் வாழ பல செயல்களைச் செய்து, வயது கூடி நரைப்பருவம் அடைந்து காற்றுக்கு இரையாகும் வேடிக்கை மனிதர்களைப் போல் வாழ்வது அல்ல மனிதப் பிறபியின் பயன்.

-----------------------------------------------------------------------------------------------------------------------------

சாதனைக்கு தாயுமானவர் பாடல்கள்

சாதனையில் வெற்றிபெற, தாயுமானவரின் ஞானகீதங்களைப்

படியுங்கள், உணருங்கள், பரவசப்படுங்கள்.

ஆனந்தமடையுங்கள்.

அனைவரையும் அழைக்கிறோம்.

